**வீரகெட்டிய பிரதோச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 11 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து வீரகெட்டிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 5,618,400 தொகை மற்றும் நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 2,900,654 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஐந்து நிர்மாண வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 477,030 தொகைக்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) ரூபா 149,749 தொகைக்கான மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கான நீதிமன்ற தண்டப்பண வருமானத்தை கணக்கீடு செய்திருக்காததுடன் பெப்ரவரி மாத நீதிமன்ற தண்டபண வருமானம் ரூபா 57,500 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கடந்த ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண வேலை ஒன்று தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 97,092 இற்கான தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத் கணக்குகள்

நிதிக் கூற்றுகளிலுள்ள 8 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 1,968,989 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) 2007 ஆண்டிற்கான வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த ரூபா 822,420 தொகைக்கான சந்தை வாடகை மற்றும் 2013 மற்றும் 2014 ஆண்டுகளுக்கான இயந்திர உபகரணங்கள் வாடகைக்கு கொடுத்ததன் மூலம் நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 906,430 இற்கான தொகையை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகை கொடுப்பது தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,156,080 தொகை நிலுவையாக காணப்பட்டதுடன், அவற்றில் 906,430 தொகை 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்ககுகள்**

தொடர்ந்தும் நிதிக் கூற்றுகளில் முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 120,099 தொகைக்கான செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 41,893 தொகையினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 258,150 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுறுதி செய்யவதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 177 | 352,500 | தகவல் முகாமைத்துவ முறைமையொன்று கொல்வனவு செய்யும் போது கேள்வி நடைமுறை கடைபிடித்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | |

| | | | |
|---|---|---|---|
| | (i) | நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 | 2017 செப்டம்பர் மாதத்திற்கான நடைபெற்ற கப் வண்டியின் விபத்து தொடர்பான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) | நிதிப் பிரமாணம் 1645 | ஒவ்வெரு மாதத்திற்குமான 267 படிவத்தின் சம்பவக் குறிப்பேடு முறைப் பிரகாரம் நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | | சபைக்குச் சொந்தமான 8 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 10,040,908 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,773,593 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 2,590,500 | 3,362,197 | 3,864,936 | 4,447,880 | 2,552,740 | 2,545,846 | 2,218,419 | 4,897,419 |
| (ii) வாடகை | 19,033,400 | 15,663,003 | 14,672,993 | 2,556,651 | 17,475,600 | 15,182,347 | 13,062,501 | 2,392,141 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 1,972,900 | 2,241,553 | 2,269,794 | 96,158 | 1,948,500 | 1,789,480 | 1,789, 852 | 95,000 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 15,557,500 | 11,940,798 | 4,947,136 | 19,654,715 | 17,263,630 | 8,890,273 | 4,146,079 | 4,682,768 |
| மொத்தம் | 39,154,300 | 33,207,551 | 25,754,859 | 26,755,404 | 39,240,470 | 28,407,946 | 21,216,851 | 12,067,328 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 33,207,551 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது ரூபா 25,754,859 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு இறுதியில் ரூபா 12,067,328 தொகையாகக் காணப்பட்ட நிலுவை வருமானம் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 26,755,404 தொகை வரை வளர்ச்சியடைந்து இருந்தது.

### 2.2.3 வீதவரி

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 4,424,310 தொகையாக காணப்பட்டதுடன் அதில் அடங்கியுள்ள ரூபா 5,000 தொகையை மிகைத்த மீதிகளை உடைய 146 வரி அலகுகளில் இருந்து ரூபா 1,359,327 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. நிலுவை வீதவரி அறவீடு செய்வது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) பிரிவுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கடை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீரகெட்டிய மற்றும் வலஸ்முல்ல பொதுச் சந்தைகளில் 06 கடைகளை வாடகைக்கு கொடுத்து வருமானம் உழைப்பதற்கு 2017 வருட இறுதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கததுடன் அந்த கடைகள் முறையே 2011 மற்றும் 2016 ஆண்டுகள் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

(ஆ) வலஸ்முல்ல பொது சந்தையின் 02 ஆம் மற்றும் 07 ஆம் இலக்க கடைகள் 2011 ஆண்டின் போது கேள்வி நடைமுறைப்படி வாடகையாளர் ஒருவருக்கு ஒப்படைத்திருந்த போதிலும் அவ் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 27 திகதி வரை வாடகை ஏதும் அறவிடப்படாமையால் சபை நிதியத்திற்கு ரூபா 324,000 தொகையினை இழந்துள்ளது.

(இ) பொது சந்தையின் 10 ஆம் இலக்க கடை நீண்டகாலமாக சிட்டை இடப்பட்டிருக்கவில்லை. இக்காலப்பகுதி தொடர்பாக ரூபா 2,500 வீதம் மாதாந்தம் பெறுமதி மதிப்பிட்டு வாடகையை சபை இழந்துள்ளது.

(ஈ) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பிட்டு வாடகையை புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்றின் மூலம் திருத்தப்பட வேண்டும் எனினும், வீரகெட்டிய ஐந்து வீதி சந்தியில் 04 கடைகள் மற்றும் வலஸ்முல்ல பொது சந்தையின் 10 கடைகள் முறையே 2006 மற்றும் 2011 ஆண்டுகளின் போது இறுதியாக பெறுமதி மதிப்பீடு செய்திருந்தது.

(உ) வலஸ்முல்ல சிறப்பு கடை தொகுதியில் 42 கடைகளுக்காக 2017 செப்டம்பர் 18 திகதி பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமையால் 2017 அக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலப் பகுதி தொடர்பாக ரூபா 383,550 இற்கான தொகை சபை நிதியம் இழந்துள்ளது.

(ஊ) மேலே (ஈ) யில் குறிப்பிட்ட சுற்றறிக்கையில் 05 பந்தியின் பிரகாரம் அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும் எனினும் வீரகெட்டிய ஐந்து வீதி சந்தியில் 04 கடைகள் மற்றும் வலஸ்முல்ல அதிகார பிரதேசத்தில் 59 கடைகள் தொடர்பாக உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப் பத்திர கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 149,150 மற்றும் 152 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படாமையின் காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதி பத்திர கடடணம் ஆக முறையே ரூபா 40,800 தொகை மற்றும் ரூபா 11,625 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதி மன்ற தண்டப் பணம் ரூபா 3,136,770 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 16,517,945 தொகையாகும் . அவற்றில் ரூபா 2,814,574 இற்கான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 2,185,426 இற்கான முத்திரை கட்டணம் 2018 மே மாதத்தில் கிடைத்திருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பு என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) நிறைவேற்றப்படாத செய்பணிகள்

மீளாய்வண்டிற்கான பாதீட்டின் மூலம் சபை நிதியத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 5,500,000 தொகை 11 அபிவிருத்தி செயற்திட்ட நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்

03 நிர்மாண வேலை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 350,000 இற்கான தொகையொன்று கிடைத்திருந்த போதிலும், இந்த நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் ஊடாக அதிகார பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்கை தரம் மற்றும் சுகாதாரத்தின் மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள வீதி விளக்குகள் தொடர்பாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் 2010 ஆகஸ்ட் 17 திகதி பீஈ/1/1 இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கை மின்சார சபையின் மூலம்

அங்கீகரித்திருக்கமையினால் சபை நிதியத்தில் இருந்து பராமரிக்கப்படும் 3032 வீதி விளக்குகளில் 656 இற்கு மாத்திரம் கட்டணங்கள் மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**3.3 மனித வன முகாமைத்துவம்**

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 07 பதவிகளில் 13 பேர் மிகையாகவும் 8 பதவிகளில் 16 பேருக்கான வெற்றிடங்கள் காணப்பட்டது.

(ஆ) சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ள 12 பேரிடம் அறவிடப்பட வேண்டி கூட்டுத் தொகை ரூபா 237,066 இற்கு கடன் மீதிகள் அறவீடு செய்வதற்கு 2018 ஜூன் 07 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தாமை**

சபைக்கு சொந்தமான 12 காணிகள் மற்றும் கட்டிடங்களின் தகவல்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தி இருக்கவில்லை.

**3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை**

2016 ஆண்டிற்கான காணிகள் மற்றும் கட்டிடங்கள் கணிப்பீட்டு அறிக்கையின் மூலம் சபையின் ஆதனங்களின் பாதுகாப்பு தொடர்பாக காணிகளின் எல்லை வேலிகள் மற்றும் பாதுகாப்பு வேலிகள் காணிகளில் தங்கியுள்ள அங்கீகாரம்மில்லாத வதிவோர்கள் மற்றும் பயிர்ச் செய்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் என்பன விதந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை செயற்படுத்தியிருக்கவில்லை.

**3.4.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

கடன் நிதியத்தை பயன்படுத்தி ரூபா 6,645,000 கிரயத்திற்கு கொல்வனவு செய்திருந்த பாதை தகர்க்கும் இயந்திரம் 2102 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரை செயற்படுத்தப்படாமல் காணப்பட்டது.

**3.4.4 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் பயன்படுத்தப்படும் மற்றும் பராமரிக்கப்படும் 34 காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் 08 வாகனங்களை சட்டரீதியாக சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.

**3.4.5 இனங்காணப்படாத சொத்துக்கள்**

முன்னைய ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டின் போது 07 காணிகளின் தரையின் அளவு 07 ஏக்கர்களாகும்

**3.4.6 வாகனப் பாவனை**

சபைக்கு சொந்தமான 6 வாகனங்களுக்கு மீளாய்வாண்டிற்கான வருமான அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை.

## 3.5 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே பின்வருமாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) எட்டு செலவு விடயங்களில் சேமிப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 18,761,006 தொகையாக இருந்ததுடன், அப்பெறுமதி 10 சதவீதம் முதல் 43 வரையை பெறுமதியான வீச்சில் இருந்தது.

(ஆ) மூன்று வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் ரூபா 12.175,218 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 18 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) மூன்று வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானத்தை மிகைத்து ரூபா 2,546,292 தொகை உழைத்திருந்ததுடன் அப் பெறுமதியானது 14 சதவீதம் முதல் 83 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 ஜுன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலாண்டிற்கு 01 வீதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்காக 03 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | குறைபாடு |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கு மீதிகள் கைவிடப்படல் குறைவாக கணக்கீடு செய்திருந்த சந்தர்பங்கள் காணப்பட்டமை. |
| | (ii) நிதிக் கூற்றுக்களில் காட்டபட்டுள்ள பெறுமதிகள் மற்றும் துணை பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளிடையே வித்தியாசம் காணப்படாமை. |
| (ஆ) வருமான நிருவாகம் | (i) நிலுவை வருமான அறவீடு செய்வதில் தாமதம் |
| | (ii) புதிய வருமானம் உருவாக்கும் வழிகளை இணங்காணாமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை அறவிடப்படாமை. |
| (இ) | சொத்து முகாமைத்துவம் | (i) | காணிகள் கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் உரிமை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்காமை. |
| (ஈ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவு விடயங்கள் இடையே கணிசமான முரண்கள் காணப்படல். |
| | | (ii) | பாதீட்டு இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு மதிப்பாய்வு மற்றும் தொடர்பான செயல் நடவடிக்கை எடுக்காமை. |